பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 12 | ஞாயிற்றுக்கிழமை | 28.07.2024 | அதிர்வு 362

## சஜித் அணி எம்.பி. ரணிலுக்கு ஆதரவு



ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக்

06



# ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவேன்!

## காலியில் மக்கள் முன்னிலையில் ரணில் அறிவிப்பு

+ அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டை மீட்பதே முதன்மை நோக்கம்.
+ சவாலைக் கண்டு ஒருபோதும் ஓடவில்லை.
+ வாய்ப் பேச்சை விடுத்து கடமையைச் செய்தேன்.
+ ஐ.எம்.எவ். உடன்பாடுகளுக்கு முரணாகச் செயற்பட முடியும் எனக் கூறுவது நாட்டுக்கு ஆபத்தாகும்.
+ சஜித், அநுரகுமார போன்றவர்களின் நிலைப்பாடு என்ன?
+ கட்சிகளை உடைப்பது எனது நோக்கமல்ல.
+ பத்து வருடங்களில் இலங்கையைச் சிங்கப்பூர் போல் கட்டியெழுப்ப முடியும்.

“வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுவேன். அதற்கான கட்டுப்பணமும் செலுத்தப்பட்டுள்ளது.”

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

04





## சஜித்தின் சகாக்கள் பலரும் ரணிலின் மேடையில் ஏறுவர்

### மொட்டு எம்.பி. மஹிந்தானந்த தெரிவிப்பு



“ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பலரும் அடுத்து வரும் நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையவுள்ளனர்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

காலியில் நேற்று நடைபெற்ற “ஒன்றாக வெல்வோம் – காலியில் நாம்”

06



பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஜனாதிபதி ஏற்று உரிய முறையில் டவடிக்கை எடுக்கா விட்டால் அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றுக்கான முன்னறிவித்தலை சபாநாயகரிடம் கையளிப்பது குறித்துத் தீவிர நடவடிக்கையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இறங்கியிருப்பதாகக் கொழும்புத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

அத்தகைய பிரேரணை ஒன்றை சபாநாயகரிடம் ஒப்படைப்பதற்கு

06



# நசுக்கப்படும் உரிமை; ஏதிலிகளின் எதிர்காலம்?



வி.எஸ்.சிவகரன்

எந்தச் சமூகம் மூலதன குவியலை எதிர்த்துப் போராடவில்லையோ அந்தச் சமூகம் தனது சந்ததிகளையும் சேர்த்து அடிமைப்படுத்துகிறது என்கிறார் மார்க்ஸ்.

வல்லோன் மட்டுமே வாழலாம் எனும் எழுதப்படாத மரபு பெரு வளர்ச்சி அடைந்து வருகிறது. அதனை தடுக்கக்கூடிய ஆற்றலோ, வல்லமையோ எளியோனுக்கு இல்லை. அவன் தங்கி வாழும் நிலையையே இந்த ஆதிக்க சமூகம் கட்டமைத்துள்ளது. சமய ரீதியாகவும், சாதிய ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் வகைப்படுத்தி மேலெழும்ப விடாமல் தொடர்ந்து நசுக்குகிறது. மேட்டுக்குடி சிந்தனையாளர்கள் தமது சுகபோக இருப்பிற்கு குந்தகம் ஏற்படாதவாறு எழுகுழாம் உறவைத் தமக்குள் ஏற்படுத்தி வைத்துள்ளனர்.

அதனால்தான் உலகம் முழுவதும் சமூக சம நீதி என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. நிர்வாகப் பொறிமுறை யாவும் பொருளாதார நலனியலாளர்களின் கைப்பாவையாகவே காணப்படுகின்றன. இந்த முறைமையை (சிஸ்டத்தை) மாற்றுவது என்பது இலகுவான விடயம் அல்ல. இது ஒரு பெரிய மாபியாக்களின் நெட்வொர்க். சமனற்ற நீதிப் பொறிமுறை என்பது தற்போது நடைமுறை நிர்வாக இயலில் சர்வ சாதாரணமாகிவிட்டது. இதை எதிர்த்து கேள்வி கேட்பவர்கள் இந்தக் களத்தில் நின்று நிலைக்க முடியாமல் காணாமல் போக வேண்டி வரும். இல்லையேல் இந்தக் கும்பல் காணாமல் ஆக்கிவிடும்.

பணமும் பதவியும் வந்துவிட்டால் பலரிடம் இயல்பாகவே போக்கிலித்தனம் குடிகொண்டு விடும். சகல அநீதிகளும் அதிகாரத்தின் மமதையால் அரங்கேறும். இதில் பாதிக்கப்படுவது சாமானியனே. அவனைத் தொடர்ந்தும் ஏதிலியாக பயன்படுத்தவே இந்த கூட்டம் விரும்பும். வறுமையும், சார்பு நீதியும் இருந்தால்தான் தொடர்ந்தும் முதலாளித்துவத்தைத் தக்க வைக்க முடியும். இதற்கு எதிராகத்தான் கம்யூனிசம் வீறு கொண்டு எழுந்தது. பொருளாதார அடியாள்களே சமூக இருப்பு நிலைத் தீர்மானங்களை மேற்கொள்கின்றமையாக் அறப்பிறழ்வு ஏற்படுகிறது எனப் பெரும் ஜனநாயகப் போர் தொடுத்தார்கள். ஆனால் தற்போதைய பொருளாதாரக் கூட்டு மாபியாக்களுக்கு முன் கம்யூனிச சித்தாந்தம் காலாவதியாகிக் கரையத் தொடங்கிவிட்டது.

ஆதிக்க வர்க்கம் எப்போதும் பாட்டாளி வர்க்கத்திற்கு நேசக்கரம் நீட்டியதில்லை. சமத்துவ நீதி என்பது அரசமைப்பு நூல்களில் அலுமாரியில் நீள் உறக்கம் கொள்கிறது. எங்கும் நீதி இல்லை. நீதி தேடிய ஆயுதப் போராட்டங்களையும் சரி, ஜனநாயகப் போராட்டங்களையும் சரி, வலுவிழக்க வைத்து இல்லாமல் செய்து விடுகிறார்கள்.

பாவிகளுக்கு நீதி பாதி என்றார் அறிஞர் அண்ணா. நீதிப் போராட்டங்களை கால நீட்சி ஏற்படுத்தி, மனவலிமையைக் குன்றவைத்து, மடை மாற்றம் செய்து விடுகிறார்கள். பொருளாதாரத் தரகர்களுக்கு ஆதரவாகவே அதிகார வர்க்கம் கட்டமைக்கப்பட்டுள்ளது. சுரண்டல் அடிமைத்தனத்தை ஒழிக்காத வரைக்கும் சமூகக் கட்டமைப்பில் மாற்றம் என்பது கானல் நீராகவே காணப்படும்.

இதற்கு எதிரான அணி திரட்டல்களை தவிர பாட்டாளி வர்க்கத்திற்கு வேறு என்ன இருக்கப் போகிறது?

வர்க்க நிலை கடந்தாலும் இனவாதமும் ஏகாதிபத்திய அடக்கு முறையும் இலங்கையில் தமிழர்கள் மீது குறையவில்லை. அது காலத்திற்குக் காலம் புதிய வடிவங்களில் உருமாற்றம் பெற்று, மீளெழுகிறது. அதை தடுப்பதற்கு எந்த வழியும் இருப்பதாகத் தெரியவில்லை. சகல விடயங்களிலும் அடக்குமுறையும் நீதியின்மையும் புறக்கணிப்பும் இனப பாகுபாடும் தொடர்கின்றன. யுத்தம் முடிவுற்று 15 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் கூட மனோநிலை ரீதியாக கொழும்பு அரசியலும், சரி நிர்வாக நிலைப்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டனவாக இல்லை. அதனால்தான் வடகிழக்கு பகுதியில் தொடர்ந்தும் புறக்கணிப்புகளும் ஏமாற்றங்களும் வலிகளும் தொடர்கதையாகவே இருக்கின்றன. இதில் அரசியல் சார்பு நிலைப்பாடுகளும், பொருளாதார ரீதியான சார்புகளும் யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் மேலோங்கி வருகின்றன.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கொண்டு வந்த காணி உச்சவரம்பு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழு 1972 ஆம் ஆண்டில் 50 ஏக்கருக்கு மேலதிகமாக காணி வைத்திருந்த தனி நபர்களிடமிருந்து காணிகளை சுவீகரிப்பு செய்தது.

இதில் வடக்கில் கிளிநொச்சி மாவட்டம், மன்னார் மாவட்டம் ஆகியவற்றில் அதிக காணிகள் உள்ளீர்க்கப்பட்டன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா

தொடர்ச்சி▼







# நசுக்கப்படும் உரிமை; ஏதிலிகளின் எதிர்காலம்?

தொடர்ச்சி▲

போன்ற மாவட்டங்களில் குறைந்த அளவான காணிகளே பெறப்பட்டன. நீண்ட காலம் யுத்தம் நடைபெற்ற பிரதேசம் என்பதால் சிவில் நிர்வாக நடைமுறைகள் காணப்படவில்லை. அதனால் காணியற்ற குடும்பங்களைப் பிரதேச செயலகங்களே குடியேற்றின. ஆனால் பிரதேச செயலகங்களுக்கும் சரியான தகவல் இல்லை. யாவும் அரச காணி என்பதே அவர்களது நிலைப்பாடாக இருந்தது.

2009ம் ஆண்டு யுத்த முடிவுக்கு பின்னர் அரசின் ஒவ்வொரு திணைக்களமும் தமது அதிகாரத்தை ஏதிலிகளாக உள்ள வடக்கு, கிழக்கு மக்கள் மீது செலுத்த ஆரம்பித்தன. அதன் விளைவே ஆயுத மோதல் முடிவுக்கு வந்தாலும், ஜனநாயக யுத்தம் வியாபித்து, அசுர குணம் கொண்டு பல வகைத் தாக்குதல்கள் நடக்கின்றன. அதனால்தான் நாளாந்த வாழ்வாதாரத்துக்காக போராடும் ஏழைகளை அதிகார வர்க்கம் நசுக்க முனைகிறது. இந்தக் காணிகளில் பலர் 30 ஆண்டுகளுக்கு மேலாக பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர். குடியேற்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீண்ட கால பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனப் பல நிலைகள் காணப்படுகின்றன. குடியிருப்பவர்களுக்கே காணி ஆவணங்கள் வழங்க வேண்டும் என்பதே நியதி.

ஆனால் வழமையான அரச காணிகளை போல் இலவசமாக அல்ல, காணிகளுக்கு வருடாந்தம் குத்தகை செலுத்த வேண்டும். இந்த ஆணைக்குழு சாதாரண குடியிருப்பாளர்களுக்கு காணி ஆவணம் வழங்குவதில் தயக்கம் காட்டி வருகிறது.

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடியேறியவர்களுக்கு இதுவரை ஆவணங்கள் வழங்கப்படவில்லை.

வெளி மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு காணி வழங்க முன்வந்தமையால் கடந்த காலத்தில் பெரும் வாதப்பிரதிவாதங்கள், போராட்டங்கள் எழுந்தன. அதனால் இதுவரை அவ்விவகாரம் முடிவுறுத்தப்படவில்லை.

உள்ளூரில் காணியற்ற குடும்பங்கள் பல ஆயிரம் உள்ள போதும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க மறுக்கிறார்கள்.

அவ்வாறே மன்னார் மாவட்டத்திலும் மன்னார் நகரப் பிரதேச செயலாளர் பிரிவிலும் இந்த நிலை பல தசாப்தங்கள் கடந்தும் நீள்கிறது. மாந்தை மேற்கு இலுப்பைக்கடவை பகுதியிலும் மூன்று தசாப்தத்திற்கு மேலாக அப்பகுதி மக்கள் அக்காணிகளில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு ஆவணம் வழங்குவதை தவிர்த்து வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பெரு வணிகர்களுக்கு காணி வழங்கியுள்ளனர்.

அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடந்த வாரம் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் ஜனநாயகப் போராட்டத்தை நடாத்தியிருந்தனர். இலஞ்சம் பெற்றுக் கொண்டே எமது காணியை வெளியாள்களுக்கு வழங்கியுள்ளனர் என அதிகாரிகள் மீது பகிரங்கமாகவே அந்த மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். அவ்வாறான நிலைமைதான் காணப்படுகிறது எனவும் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் காணியைப் பெறுவதற்கு அரசியல் செல்வாக்கும் பொருளாதார வலிமையும் முதன்மையாகத் தேவைப்படுகின்றன. பணமும் அதிகாரமுமே யாவற்றையும் தீர்மானிக்கின்றது. சாமானியனின் ஜனநாயகக் குரல் என்பது காற்றோடு காற்றாகக் கலந்து விடுகிறது. அது எந்த வல்லாதிக்கர்களின் காதுகளுக்குள்ளும் போவதில்லை என்பதே பரிதாபகரமான ஜனநாயகத் தோல்வி. அரசிறைமையின் ஜனநாயக படுகொலை. இதுவே தொடர்கிறது.

வனத்திணைக்களம், வனவிலங்குகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், முப்படையினர் ஆகிய தரப்புகளின் நில அபகரிப்பு, பௌத்த கோயில்களுக்கான நிலஆக்கிரமிப்பு, காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தான்தோன்றித்தனமான அடாவடித்தனம், பொருளாதார நலன் சார்ந்தவர்களது அபகரிப்பு என தமிழர்கள் மீது கூட்டு வன்மம் அரசின் ஆசீர்வாதத்துடன் முன்னெடுக்கப்படுகின்றது.

இதில் தமிழ் அரசியல்வாதிகள் மக்கள் பிரச்சினைகளுக்கு ஆதரவாக முன்வருவதில்லை. அதற்காக போராடவும் தயாராக இல்லை. அரச விசுவாசத்துடன் நழுவி விடுகிறார்கள். வாக்களித்த மக்கள் ஒவ்வொரு தடவையும் ஏமாந்தே போகிறார்கள். இப்போது தமிழ் அரசியல்வாதிகளும் வணிகர்களாகிவிட்டனர். ஊழலும், லஞ்சமும் இந்தியாவை மிஞ்சும் அளவுக்கு விஞ்சி விட்டன.

இந்த உரிமை இழந்த மக்கள் தங்களின் உரிமைக் குரலை வல்லாதிக்க ஆட்சிப் பீடம் செவிமடுத்து நீதியை வழங்குமா என ஏங்கி நிற்கின்றனர.

இவர்களது வாழ்விடங்களையும் வாழ்வாதாரத்தையும் காப்பதற்கு முன்வர வேண்டியது இந்த சமூகத்தின் கூட்டுப் பொறுப்பும் தார்மீக கடமையும் ஆகும்.

ஏழை வீட்டிலும் ஒளி பிரகாசிக்க வழி விடுங்கள்.













# ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலி நகர சபை மைதானத்தில் நேற்று நடைபெற்ற "ஒன்றாக வெல்வோம் – காலியில் நாம்" கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சவால்களில் இருந்து தாம் ஒருபோதும் பின்வாங்கவில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, பேசிகொண்டிருக்காமல் தனது கடமைகளை நிறைவேற்றுவதே தனது அரசியல் கொள்கை எனவும், நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதாக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதாகவும் உறுதியளித்தார்.

பல அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 50 இற்கும் மேற்பட்ட அமைச்சர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், காலி மாவட்டத்தைச் சேர்ந்த 15 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களும் அரசின் எதிர்கால வேலைத்திட்டத்தை மக்களுக்கு அறிவிக்கும் இந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் மேலும் உரையாற்றுகையில்,

"காலி மாவட்டம் எனக்கு முக்கியமானது. எனது தந்தை வழிச் சமூகம் இங்கிருந்தே வருகின்றது. இந்த நகரத்தோடு அந்தத் தொடர்பு உள்ளது.

நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளும் முன்னதாக சிந்திக்க வேண்டியிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பு இதனை விடவும் சிந்திக்க வேண்டிய நிலைமை காணப்பட்டது.

2022ஆம் ஆண்டில் பிரதமர் பதவியை ஏற்க எவரும் இல்லாத நிலையிலேயே எனக்கு வழங்கப்பட்டது. தெற்காசியாவில் முதல் முறையாக பிரதமர் பதவி யாசகம் செய்தது. நீங்கள் அடைந்த துயரங்களைக் கண்டுதான் பதவியை ஏற்றுக்கொண்டேன். உரம், எரிபொருள், எரிவாயு, பாடசாலை செல்லவும் வழியிருக்கவில்லை. நாட்டை ஏற்று இரு வருடங்களில் அந்த நிலையை மாற்றிக் காட்டினேன்.

நீண்ட நேரம் பேசுபவன் நான் அல்லன். ஒரு வேலையை ஏற்றுக்கொண்டால் அதனைச் செய்து முடிப்பேன். கஷ்டமான காலத்திலேயே நாட்டை ஏற்றேன். உணவைப் பெற்றுத் தந்தோம். உரத்தைப் பெற்றுத் தந்தோம், சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியாவாவிடம் உதவி கோரினேன். உலக வங்கியிடம் உதவி கோரினேன். ஜப்பானிடம் உதவி கோரினேன். இவ்வாறுதான் பயணத்தை முன்னெடுத்தேன்.

உதவியைப் பெற்றுக்கொண்டுதான் இன்றைய நிலைக்கு வந்துள்ளோம். வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளோம். அதற்காக கஷ்டமான தீர்மானங்களை எடுத்தேன். 6 மாதங்களில் இந்த நிலையை மாற்ற முடியும் என்று நம்பினேன். கடன் பெற முடியாத வகையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது. எரிபொருள் விலை குறைந்துள்ளது.

பல பிரச்சினைகள் இன்றும் உள்ளன. மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். வங்கிகளில் நகைகளை அடகு வைக்கும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால், பிரச்சினைகளுக்குப் படிப்படியாகத் தீர்வுகளை வழங்கி வருகின்றோம். பொருளாதாரம் வலுவடையும் போது எமது கஷ்டங்களுக்கான தீர்வுகள் கிடைக்கும்.

அண்மையில் தங்க நகைகளுக்கான சலுகைகளை வழங்கியுள்ளோம். நாட்டு மக்களின் கஷ்டங்களைக் கண்டு கவலைப்படுகின்றோம். அதனை நிவர்த்திக்கு எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். சமுர்த்திக்கு மாறாக 'அஸ்வெசும' திட்டத்தில் மூன்று மடங்கு அதிகமாக நிவாரணம் வழங்குகின்றோம். பயனாளிகள் எண்ணிக்கையும் 24 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. புலமைப்பரிசிலும் வழங்குகின்றோம்.

எந்த அரசிலும் காணி உறுதிகள் உங்களுக்கு கிடைக்கவில்லை. முடிந்த வகையில் மக்களுக்கு நிவாரணம் வழங்குவோம். தோட்ட தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகள் கிராமங்களாக மாற்றப்படும். பொது மக்களுக்கு உரிமை வழங்குவதே எனது நோக்கமாகும். அதனை கைவிடப் போவதில்லை. உங்களை செல்வந்தர்க்காக்கும் வரையில் இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

கிராமங்களில் வறுமையை போக்க விவசாய நவீனமயமாக்கலை செய்கின்றோம். நாட்டில் தற்போது நிலைத்தன்மை காணப்படுவதால் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வர ஆரம்பித்துள்ளனர். வெள்ளையர்கள், ரஸ்யர்கள், இஸ்ரேலியர்கள், யுக்ரேனியர்கள் என பலரும் இலங்கைக்கு இன்று சுற்றுலா வந்துள்ளனர். அவர்கள் ஊடாக கிடைக்கும் வருமானத்தையும் அதிகரித்துக்கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும்.

இவற்றுக்காக நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துக் கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியது அவசியம். கடன் வழங்கிய நாடுகளின் நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டிய அவசியமும் உள்ளது. அவற்றை சிதைத்துவிட்டு செல்ல முடியாது. அவ்வாறு செய்ய முடியும் என்று கூறினால் அது பொய்யானது. அவர்கள் நாட்டின் முன்னேற்றத்துக்கு தடையாக இருக்கின்றனர்.

அதனாலேயே எதிர்க்கட்சிகள் தமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும் என்று கூறுகிறேன். எமக்கு இப்போது கிடைக்கும் நிதி கிடைக்காவிட்டால் மீண்டும் வரிசையில் நிற்கும் நிலை வரும். எனவே அரசியலுக்காக பொய்களைச் சொல்லி நாட்டை மீண்டும் வீழ்த்த வேண்டாமென கேட்டுக் கொள்கிறேன். நாடு சரிவடைந்த பின்னர் அதனை ஏற்றுக் கொள்ளாமல் ஓட்டம் பிடித்துவிடுவார்கள். ஒலிம்பிக் வீரர்களையும் மிஞ்சி ஓடுவார்கள்.

அதனால் மேற்சொன்ன ஒப்பந்தங்களை முன்னோக்கி கொண்டுச் செல்ல கடமைபட்டுள்ளோம். இன்று ரூபா வலுவடைந்துள்ளது. வட்டி வீதம் குறைகிறது. இந்தப் பயணத்தைத் தொடர்ந்தும் செல்வோம். எமக்கு மாற்றுத் தீர்வுகள் இல்லை. வேறு வழியிருந்தால் அதனையும் சொல்லுங்கள். பொய் சொல்லி காலம் கடத்தக்கூடாது. இப்போது உதவிகள் கிடைக்கின்றன. நாட்டை முன்னேற்ற வழி கிடைத்துள்ளது.

நாட்டு மக்களைப் போலவே இளையோரின் எதிர்காலம் பற்றியும் சிந்திக்க வேண்டும். இலட்சக்கணக்கில் இளையோர் நாட்டை விட்டுச் சென்றனர். அந்த நிலை மீண்டும் வரக்கூடாது. நாம் நல்லதொரு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். சிங்கப்பூர், டுபாய் போன்ற நாடுகளின் நிலையை நாம் காண்கின்றோம். அவ்வாறு ஏன் எம்மால் வாழ முடியாது. பொய்களை சொல்லிக்கொண்டிருந்தால்தான் இந்த நிலையில் இருக்கின்றோம். 2048 பற்றி நான் பேசிய போது எதிர்கட்சியினர் ஏளனமாக சிரித்தார்கள். ஆனால் தற்போதுள்ள இளைஞர்கள் 2048 ஆம் ஆண்டிலேயே ஐம்பது வயதை அடைவார்கள் என்பது எதிர்கட்சியினருக்கு விளங்கவில்லை.

நாட்டுக்கு இன்னும் பல முதலீடுகளை கொண்டு வர வேண்டும். தொழிற்சாலைகளைக் கொண்டு வர வேண்டும். ஹோட்டல்களைக் கொண்டுவர வேண்டும். நாம் வலுவடைய வேண்டியது அவசியம். இன்று நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 85 பில்லியன் டொலர்களாகக் காணப்படுகின்றது. இந்தத் தசாப்தத்தின் இடைப்பகுதியில் அதனை 350 பில்லியன் டொலர்கள் வரையில் அதிகரிக்க வேண்டும். அதனை நான்கு மடங்காக அதிகரிக்கும் இயலுமை எம்மிடம் உள்ளது.

சீனா, சிங்கப்பூர், வியட்நாம் போன்ற நாடுகளால் முடியும் என்றால் எம்மாலும் செய்ய முடியும். இளையோரின் எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டும். போராட்டங்களைச் செய்து கொண்டிருப்பதில் பயனில்லை. எதிர்காலத்தில் இளையோரே நாட்டை ஏற்கப் போகின்றார்கள். அவர்களின் எதிர்காலத்தைப் பற்றி கேள்வியெழுப்ப அவர்களுக்கு உரிமை உள்ளது போலவே, அவர்களுக்கு பதிலளிக்க நாமும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அவ்வாறான பயணத்தைச் செல்லவே இன்று

05▶



# ஜனாதிபதித் தேர்தல்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நான் சுயாதீன வேட்பாளராகக் களமிறங்கியிருக்கின்றேன். பழைய அரசியல் முறையிலிருந்து நாம் விடுபட வேண்டும். நான் அமைச்சுக்களைப் பகிர்ந்தளித்தபோது அவர்களின் இயலுமையை அறிந்திருக்கவில்லை. ஆனால், திறமையாகச் செயற்படுவோர் இருக்கின்றனர் என்பது தெரிகின்றது. அரசியலைப் பற்றி சிந்திக்காமல் நாம் செயலாற்றுகின்றோம்.

அதனாலேயே நாட்டைக் கட்டியெழுப்ப முடிந்தது. புதிய முறையில் சிந்தித்து செயலாற்றினோம். நாட்டை நாம் பலப்படுத்த வேண்டும். எதிர்காலத்தைக் கட்டமைக்க வேண்டும். குறுகிய அரசியல் நோக்கங்களுடன் செயலாற்றக் கூடாது. சஜித் பிரேதமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க போன்றவர்களின் நிலைப்பாடு என்ன? கட்சிகளை உடைப்பது எனது நோக்கமல்ல. புதிய வகையில் சிந்தித்து அனைவரும் ஒன்றுபட்டுச் செல்ல வேண்டும் என்றே கூறுகின்றேன்.

எமது இறுதிக் காலத்தில் அவற்றைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றோம். நான், மஹிந்த ராஜபக்ஷ, கரு ஜயசூரிய, சந்திரிகா, மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் அரசியலில் இறுதிக் கட்டத்தை நெருங்கியிருக்கின்றோம். எனவே, முரண்பாடுகளை விடுத்து முன்னோக்கிச் செல்ல வேண்டும். முரண்பாடுகளை வளர்த்ததால்தான் இந்த நிலை வந்தது. இனியாவது முன்னோக்கிச் செல்வோம்.

பிள்ளைகளின் எதிர்காலம் பற்றி புதிதாகச் சிந்திப்போம். 10 வருடங்களில் இந்த நாட்டை சிங்கப்பூரைப் போல் கட்டியெழுப்ப முடியும். அதற்கான பயணத்தில் ஒன்றிணைந்து செல்வோம். நாட்டின் வெற்றியை உறுதி செய்வோம்!” – என்றார்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டு விடயங்கள் குறித்து இப்போது ஆராயப்படுவதாகத் தகவல்.

ஒன்று – குறைந்தபட்சம்அறுதிப்பெரும் பான்மை – 113 எம்பிக்களின் ஆதரவை யாவது – அந்தப் பிரேரணையில் அவர்களைக் கொண்டு ஒப்பமிடச் செய்வதன் மூலம் பெற வேண்டும். அது சாத்தியமானதா என்று ஆராயப்படுகின்றது.

அத்தகைய பிரேரணை ஒன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டு அதை மேல் நடவடிக்கைக்காக சபாநாயகர் ஏற்றுக் கொண்டு விட்டால், அத்திகதியிலிருந்து அப்பிரேரணை மீதான நடவடிக்கை முடியும் வரை நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது. அதனை சாதக அம்சமாகக் காட்டி, அரசுப் பக்கம் இருக்கும் – முற்கூட்டியே நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு எதிரான – எம்.பிக்களின் ஆதரவை வளைத்துப் போட்டு, தேவையான எம்.பிக்களின் ஆதரவை பெற முடியுமா என்று யோசிக்கப்படுகின்றதாம்.

அடுத்தது – ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 55 நாள்களே இருக்கையில் ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றை நகர்த்துவதற்கு அது போதுமான கால அவகாசம் அல்ல என்ற நிலைமையாகும். இறுதி இலக்கை எட்டுவதற்கான கால அவகாசம் போதுமானதல்ல என்றாலும் குற்ற விசாரணைப் பிரேரணைக்கான நகர்வு ஜனாதிபதி தேர்தல் பிரச்சார சமயத்தில் எதிரணிக்கு நன்கு உதவும் என்று கருதப்படுகின்றதாம்.

மொட்டுக்கட்சி தன்னை ஆதரிக்க முன்வராத சூழலில், அந்த சீற்றத்தில் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டால், தமக்கு எதிரான குற்ற விசாரணைப்பிரேரணைக்கான முன்நகர்வு நாடாளுமன்றத்தில் ஆரம்பிக்கப்பட்டதும் அதற்குப் பயந்தே முற்கூட்டியே நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்து விட்டார் என்றும் பிரசாரப்படுத்த முடியும் எனவும் எதிரணிகள் கருதுகின்றனவாம்.

\+ \+ \+

ஜனாதிபதித் தேர்தலையொட்டி இரண்டாவது – பிந்திய – கருத்துக்கணிப்பு ஒன்று இடம்பெற்றிருப்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டு இருக்கின்றது.

அதன்படி –

39 வீதமாக இருந்த சஜித் பிரேமதாஸவின் ஆதரவு தளம் மேலும் அதிகரித்து 42.5 வீதமாக உயர்ந்து உள்ளதாம்.

22 வீதமாக முன்பிருந்த அநுரகுமார திஸாநாயக்கரின் ஆதரவு ஏழு வீதம் வீழ்ச்சி அடைந்து தற்போது 15 வீதமாக மாறி உள்ளது.

இதுவரை 9 வீதமாக இருந்த ரணில் விக்ரமசிங்கவின் ஆதரவு 12 வீதமாக கூடியிருக்கின்றது.

மொட்டுக் கட்சியின் ஆதரவுத்தளம் ஒன்பது வீதமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஏறத்தாழ 17 வீதமானோர் இன்னும் யாரை ஆதரிப்பது என்று தீர்மானிக்க வில்லை என்றும் கூறப்பட்டது.

இந்தப் புள்ளிவிவர கணக்கெடுப்பு வடக்கு – கிழக்கைத் தவிர்த்துத்தான் முன்னெடுக்கப்பட்டது என்றும்,

அந்தப் புள்ளிவிவரங்களும் வந்தால் அதற்கேற்ப ஆதரவு தள நிலைமை மாறும் என்றும் கூட அச்செய்தியில் மேலும் கூறப்பட்டது.



# ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் தயாசிறி ஜயசேகர ஒப்பந்தம்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால தகவல்

"ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் தயாசிறி ஜயசேகர கையெழுத்திடவுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. ஓகஸ்ட் 8 ஆம் திகதி தயாசிறி ஜயசேகர யார் என்பதை அறிந்து கொள்ளலாம். எனவே சுதந்திர கட்சி ஜனாதிபதித் தேர்தலில் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கே ஆதரவளிக்கும்."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்ட ரீதியான நிறைவேற்று சபையின் ஊடாகவே விஜேதாஸ ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். நிறைவேற்று சபையின் அங்கீகாரத்துடனேயே அவர் ஜனாதிபதி வேட்பாளராகவும் அறிவிக்கப்பட்டார். அதற்கு எவரும் எதிர்ப்பினை வெளிப்படுத்தவில்லை.

எனினும் சிலர் அவர் சுதந்திர கட்சி இல்லை என்றும், வெளிநபர் என்றும் கூறுகின்றனர். விஜேதாஸ ராஜபக்ஷவை அவ்வாறு கூறுபவர்கள் சு.க. தோன்றிய போது இந்த உலகத்தில் பிறந்திருக்கவும் மாட்டார்கள். சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட போது, அவருக்கான நீதிமன்றத்தில் முன்னிலையான இளம் சட்டத்தரணியாக விஜேதாஸ ராஜபக்ஷவே காணப்பட்டார்.

கட்சித் தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னரே அவர்சு.க. உறுப்புரிமையையும்பெற்றுள்ளார். ஆனால் சு.க.விலிருந்து அரசாங்கத்துடன் இணைந்தவர்களுக்கு கட்சி தொடர்பில் எந்தவொரு தீர்மானத்தையும் எடுப்பதற்கு உரிமை இல்லை. அவர்கள் எடுக்கும் எந்தவொரு தீர்மானமும் செல்லுபடியாகாது. ஜனாதிபதித் தேர்தலில் எனது முழுமையான ஆதரவு விஜேதாஸ ராஜபக்ஷவுக்கே.

ஐக்கியமக்கள்சக்தியுடன்8ஆம்திகதி கூட்டணி ஒப்பந்தத்தில் தயாசிறி ஜயசேகர கையெழுத்திடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அன்றைய தினம் அவரது நடவடிக்கை என்ன என்பதை தெரிந்து கொள்ள முடியும்."– என்றார்.

## சஜித்தின் சகாக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:–

"ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார், அவர் ஓடிவிடுவார் எனச் சிலர் பிரசாரம் செய்தனர். ஆனால், அவர் தேர்தலில் போட்டியிடுகின்றார். அவர் வேட்பாளராகவே இந்த மேடையில் அமர்ந்துள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றி பெறுவார் என்பது உறுதி. அவர் பின்னால்தான் அனைத்து கட்சிகளும் இன்றுள்ளன.

நெருக்கடியான நேரத்தில் நாட்டைப் பொறுப்பேற்காத சஜித் பிரேமதாஸ வெற்றி வேட்பாளரா? இல்லை. நாட்டை மீட்கக்கூடிய வேட்பாளர் எமது மேடையிலேயே இருக்கின்றார். அடுத்து வரும் நாட்களில் சஜித்தின் சகாக்களும் எமது மேடையில் ஏறுவார்கள்." – என்றார்.

## சஜித் அணி எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரஹுமான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் காலி நகர சபை மைதானத்தில் நேற்று நடைபெற்ற "ஒன்றாக வெல்வோம் – காலியில் நாம்" கூட்டத்தின் போது இஷாக் ரஹுமான் எம்.பி. இந்த ஆதரவை வழங்கியுள்ளார்.

# ரணில் – பஸில் மீண்டும் இன்று சந்திப்பு!

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சித்து வரும் நிலையில், அக்கட்சி சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளதால் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.



ஜனாதிபதி வேட்பாளர் மற்றும் உருவாக்கப்படவுள்ள புதிய கூட்டணி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மொட்டுக் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையில் தீர்க்கமான சந்திப்புக்கள் அண்மையில் நடந்தன. நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவும் முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவளித்தால் மொட்டுக் கட்சிக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 30 வீதமும், மாகாண சபைத் தேர்தலில் 35 வீதமும், நாடாளுமன்றத் தேர்தலில் 40 வீதமும் போட்டியிடுவதற்கான ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார்.

எனினும், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 90 வீதமும், நாடாளுமன்றத் தேர்தலில் 70 வீதமும், மாகாண சபைத் தேர்தலில் 70 வீதமும் தமது கட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று பஸில் ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

இதனால் இரு தரப்புகளும் இணக்கப்பாட்டுக்கு வருவது இழுபறியில் உள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மொட்டுக் கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான மற்றுமொரு முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது கட்சியின் நிலைப்பாட்டை மொட்டுக் கட்சி நாளை திங்கட்கிழமை அறிவிக்கும் என்று ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன.

# ஒற்றுமை இன்மை காரணமாக மக்களையும் மண்ணையும் நாங்கள் இழந்துவிடக் கூடாது!

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



(எஸ்.ஆர்.லெம்பேட்)

தமிழர்கள் பூர்வீகமாக வடக்கு, கிழக்கில் வாழ்ந்தார்கள் என்கின்ற வரலாற்றைச் சிதைக்கும் வகையில் இன்றைக்கு தென்னிலங்கை திட்டமிட்டு பல விடயங்களை அரங்கேற்றி வருகின்றது.எமது ஒற்றுமை இன்மை காரணமாக எமது மக்களையும் மண்ணையும் நாங்கள் இழந்து விடக்கூடாது என்று ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்,

வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட ரெலோ கட்சியின் தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி, முன்னாள் போராளி ஜெகன் உட்பட 53 தமிழ் அரசியல் கைதிகளின் 41 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று மாலை 6 மணியளவில் மன்னாரில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்திய பின் உரையாற்றுகையிலேயே செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

"அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஓர் இன அழிப்பின் ஆரம்ப இடம்தான் வெலிக்கடை சிறைச்சாலை. ஓர் இனத்தின் மீது வன்முறைகள் ஆரம்பிக்கப்படுவதுதான் இலங்கை வரலாற்றில் கூறப்படுகின்ற மிக மோசமான வன்முறையாக உள்ளது.

இந்த நாட்டில் பல படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. தன்னைக் கொலை செய்வதன் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் போராட்டத்தில் இணைவார்கள் எனத் தலைவர் கூறிய தீர்க்கதரிசனம் 1983 ஆம் ஆண்டு இளைஞர், யுவதிகள் தமது உயிரை எமது தேசத்திற்காக தியாகம் செய்துள்ளனர்.

ஆயுதப் போராட்டமாக மாறி தற்போது ஆயுதப்போராட்டம் மௌனிக் கப்பட்டு ,மீண்டும் அஹிம்சை ரீதியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு எமது இனத்தின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும் கால கட்டத்தில் இருக்கின்றோம்.

எமது மக்களின் நிலங்கள், கடல் வளம், மண் அபகரிக்கப்படுகின்றது. நாங்கள் ஒரு காலத்திலே தமிழர்கள் பூர்வீகமாக வடக்கு – கிழக்கில் வாழ்ந்தார்கள் என்கின்ற வரலாற்றை சிதைக்கும் வகையில் இன்றைக்கு தென்னிலங்கை திட்டமிட்டு பல விடயங்களை அரங்கேற்றி வருகின்றது.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தலைவர்களையும், போராளிகளையும் இழந்த இயக்கமாகத் தொடர்ச்சியாக செயற்பட்டு வந்தாலும் கூட தலைவர்களின் சிந்தனையின் அடிப்படையில் எல்லாப் போராளிகளையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்பதன் அடிப்படையில்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழரசுக் கட்சி வெளியேறியுள்ள போதும் ஏனைய ஐந்து கட்சிகளுடன் போராட்டக் கட்சியான ஜனநாயக போராளிகள் கட்சியையும் இணைத்து செயற்பட்டு வருகின்றோம்.

எமது ஒற்றுமை இன்மை காரணமாக எமது மக்களையும் மண்ணையும் நாங்கள் இழந்துவிடக்கூடாது." – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அறிவிலித்தனமான மோதல்

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை மலினப்படுத்தும் விதத்தில் அரசு நடந்துகொண்டமையை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.

இலங்கையில் நீதித்துறையின் தனித்துவத்தை நிலை நிறுத்துவதில் உயர்நீதிமன்றம் உட்பட்ட இலங்கையின் நீதித்துறை மிக உறுதியாக நிற்கும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இந்த விடயத்தில் நீதித்துறையுடன் தங்கள் சங்கமும் சங்க அங்கத்தினரும் ஐக்கியத்துடன் நிற்பார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கின்றது.

அரசமைப்புக் கவுன்ஸிலின் அங்கீகாரத்துடன் ஜனாதிபதி செய்யும் நியமனங்களை கேள்விக்குட்படுத்தும் நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்திற்கு கிடையாது என்ற சாரப்பட அரசு தரப்பு கூறுவது எந்த அடிப்படையிலும் கூட ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெளிவுபடுத்தி இருக்கின்றது.

ஜனாதிபதியினால் செய்யப்படும் நியமனங்களைக் கேள்விக்கு உட்படுத்தும் நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்துக்கு அரசமைப்பின் கீழ் தெளிவாக வழங்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பில் அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் தெளிவான வரையறைகளை வெளிப்படுத்தி உள்ளது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டுகின்றது.

அரசமைப்புக் கவுன்ஸிலின் முடிவுகள், தீர்மானங்களை தனக்குரிய அடிப்படை உரிமைகள் தொடர்பான நியாயாதிக்கத்தின் கீழ் உயர் நீதிமன்றம் கேள்விக்கு உட்படுத்த முடியும்.

அதேபோல 19ஆவது திருத்தத்தின் பிரகாரம், நாட்டில் போரையும் சமாதானத்தையும் பிரகடனப்படுத்தும் ஜனாதிபதியின் நடவடிக்கையைத் தவிர, அவரின் பிற நடவடிக்கைகள், விடயங்கள் யாவற்றிலும் உயர் நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கம் செல்லுபடியாகும் என்பதையும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டி உள்ளது.

நீதித்துறையின் சுயாதீனம், தனித்துவம் பற்றிக் குறிப்பிட்ட இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறி பிரதமர், சபாநாயகர் உட்பட யாரும் செயற்பட முடியாது என்றும் தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் அரசு தவறிழைக்குமானால் - நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றுச் செயற்பட மறுக்குமானால் - அது நாட்டில் நீதித்துறை மீதான மக்களின் நம்பிக்கையை மலினப்படுத்தி, ஜனநாயக விழுமியங்களை சின்னாபின்னமாக்கி விடும் என்றும் அந்த அமைப்பு வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி நாட்டில் இப்போது பொலிஸ் மா அதிபர் பதவியில் இல்லை. பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்கும்படி உயர்நீதிமன்றம் வழிகாட்டல் விடுத்தும், அதைச் செய்யாமல் அரசும் ஜனாதிபதியும் இழுத்தடித்தால் விளைவுகள் மிக மோசமாகலாம்.

தமது தற்போதைய பதவிக்காலத்தின் அந்தத்தில் இருக்கின்றார் ஜனாதிபதி விக்கிரமசிங்க. இன்னும் 55 நாள்கள்தான் அவரின் தற்போதைய பதவி. அதன் பின்னர் அவர் பதவியில் நீடிப்பாரா, இல்லையா என்பது மக்களின் கைகளில் தான் உள்ளது.

இந்தச் சமயத்தில் - அதுவும் ஜனாதிபதி தேர்தல் வேளையில் - நீதித்துறையுடன் ஜனாதிபதி போட்டியாக முட்டி மோதி, சண்டப்பிரசண்டம் பண்ணுவது - அதுவும் ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் நாட்டில் ஒரு பொலிஸ்மா அதிபர் இல்லாத நிலைமையை தமது வறட்டுப் பிடிவாதம் மூலம் நீடிக்கச் செய்வது - ஒருபுறம் அரசியல் முட்டாள்தனம், மறுபுறம் இந்த அதிகார மேதாவித்தனம் காலம் கடந்தும் பல சிக்கல்களைத் தந்து நிற்கும்.

ஜனாதிபதி பதவியை விட்டு விலகிய பின்னர் மைத்திரிபால சிறிசேன இப்போது நீதித்துறையுடன் படும் அவஸ்தை, பிய்ச்சல் பிடுங்கல்களை பார்த்த பின்னரும் கூட, ரணில் விக்கிரமசிங்க இப்படி பெரும் அழிச்சாட்டியம் பண்ணுவது அறிவிலித்தனம்தான்.

# வளர்ச்சியடைந்த மாநிலங்களே வளர்ந்த இந்தியாவை உருவாக்கும்

## நிதி ஆயோக் கூட்டத்தில் பிரதமர் மோடி தெரிவிப்பு



“வளர்ச்சியடைந்த மாநிலங்களே வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும்.”

– இவ்வாறு நிதி ஆயோக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நிதி ஆயோக் அமைப்பின் 9 ஆவது ஆட்சிக்குழுக் கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் டில்லியில் நேற்று நடைபெற்றது. இதன்போது பிரதமர் மோடி ஆற்றிய உரையினை நிதி ஆயோக் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளது. இதன்போது பிரதமர் மோடி குறிப்பிடுகையில்,

“2047 இல் இந்தியா வளர்ச்சி அடைந்த நாடாக மாற வேண்டும் என்பது ஒவ்வொரு இந்தியனின் லட்சியம். மக்களுடன் நேரடியாக இணைந்திருப்பதால், இந்த இலக்கை அடைய மாநிலங்கள் செயலில் பங்கு வகிக்க முடியும்.

இந்த தசாப்தம் தொழில்நுட்ப மற்றும் புவி – அரசியல் மாற்றங்கள் மற்றும் வாய்ப்புகள் நிறைந்தது. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, சர்வதேச முதலீடுகளுக்கு உகந்ததாக நமது கொள்கைகளை உருவாக்க வேண்டும். இது இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கான முன்னேற்றத்திற்கான படிக்கல். நாடு சரியான திசையில் சென்று கொண்டிருக்கிறது. நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் தொற்றுநோயை நாம் தோற்கடித்துள்ளோம். நமது மக்கள் உற்சாகமும் நம்பிக்கையும் நிறைந்தவர்கள். அனைத்து மாநிலங்களின் கூட்டு முயற்சியுடன் 2047 இல் வளர்ச்சி அடைந்த இந்தியா பற்றிய நமது கனவுகளை நிறைவேற்ற முடியும். வளர்ச்சியடைந்த மாநிலங்களே வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும்.

இந்தியா ஓர் இளமையான நாடு. இந்திய பணியாளர்கள் உலகம் முழுவதையும் ஈர்த்து வருகிறார்கள். நமது இளைஞர்களை, திறமையான மற்றும் வேலை வாய்ப்புள்ள பணியாளர்களாக மாற்றுவதை நாம் இலக்காகக் கொள்ள வேண்டும். திறன், ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் வேலை சார்ந்த அறிவு ஆகியவை வளர்ச்சி அடைந்த இந்தியா எனும் இலக்கை அடைய மிகவும்.

இந்திய சமூகத்திலும், பொருளாதாரத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், தேசிய கல்விக் கொள்கை சீர்திருத்தங்கள், முத்ரா, விஸ்வகர்மா, ஸ்வநிதி திட்டங்கள், குற்றவியல் நீதி அமைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் போன்றவற்றை பயன்படுத்தப்பட வேண்டும்.” – என்றார்.

இதனிடையே, நிதி ஆயோக் கூட்டத்தில் 5 நிமிடங்கள் மட்டுமே தன்னால் பேச முடிந்தது என்றும், பிறகு தனது மைக் ஓப் செய்யப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்துள்ள மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, மத்திய அரசு பாரபட்சம் காட்டுவதாகக் குற்றம் சாட்டி வெளிநடப்பு செய்தார்.

# நிதி ஆயோக் கூட்டம் தொடர்பில் மம்தா கூறியது முற்றிலும் தவறானது

## நிர்மலா சீதாராமன் கூறுகின்றார்

நிதி ஆயோக் கூட்டத்தில் தனது மைக் அணைக்கப்பட்டதாக மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கூறியது முற்றிலும் தவறானது என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ள நிர்மலா சீதாராமன்,

“பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற நிதி ஆயோக் நிர்வாகக் குழு கூட்டத்தில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி பேசினார். அவர் பேசியதை நாங்கள் அனைவரும் கேட்டோம். ஒவ்வொரு முதல்வருக்கும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்பட்டது.

ஒதுக்கப்பட்ட நேரம் ஒவ்வொருவர் மேஜை முன்பும் இருந்த திரையில் காட்டப்பட்டது. திரையிலேயே முதல்வர்கள் பேசுவதை பார்க்க முடியும். அந்த வகையில் முதல்வர் மம்தா பானர்ஜி பேசியதையும் பார்த்தோம். தான் பேசும்போது, தனது மைக் துண்டிக்கப்பட்டதாக ஊடகங்கள் மூலம் மம்தா பானர்ஜி கூறி இருக்கிறார். இது முற்றிலும் தவறானது.

ஒவ்வொரு முதல்வருக்கும் பேசுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டது. நேரம் முடியும்போது அதை நினைவூட்டுவதற்காக கூட்டத்தை நிர்வகித்த பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், மைக்கில் தட்டி ஒலி எழுப்பினார். யாரெல்லாம் நேரத்தைக் கடந்து பேசினார்களோ அவர்கள் அனைவர் விஷயத்திலும் இது நடந்தது. ஆனால், தனது மைக் ஒப் செய்யப்பட்டதாக மம்தா பானர்ஜி கூறியது துரதிர்ஷ்டவசமானது. அது உண்மையல்ல.

மம்தா பானர்ஜி கலந்து கொண்டதில் மகிழ்ச்சி. அவரும் மேற்கு வங்கத்திற்காக பேசினார். அதோடு, அனைத்து எதிர்க்கட்சிகளுக்காகவும் பேசுவதாக அவர் கூறினார். அவர் பேசினார். நாங்களும் கேட்டோம். அவருக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது என்பது அவருக்கு நினைவூட்டப்பட்டது. கூடுதல் நேரம் வேண்டும் என்று கேட்டு அவர் பேசி இருக்கலாம். சில மாநில முதல்வர்கள் அவ்வாறு பேசினார்கள். ஆனால், மம்தா பானர்ஜி அவ்வாறு செய்யவில்லை.



மாறாக, குற்றம் சாட்டுவதற்காக அதை அவர் தேர்ந்தெடுத்துள்ளார். உடனடியாக கூட்டத்தில் இருந்து வெளியேறினார். மேலும், தனது மைக் அணைக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டினார். அவர் அவ்வாறு பேசியது துரதிர்ஷ்டவசமானது. பொய்யின் அடிப்படையில் கதையை உருவாக்குவதற்கு பதிலாக, அவர் உண்மையைப் பேச வேண்டும்.” – என்றார்.

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கையெழுத்திட்டார் கமலா ஹரிஸ்



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக கமலா ஹரிஸ் தேர்தலில் களமிறங்கி தற்போது தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

கமலா ஹரிஸின் பிரசாரத்திற்கு ஆதரவும் நன்கொடைகளும் குவிந்து வருகின்ற நிலையில், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது வேட்புமனுவை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும் படிவங்களில் அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் நேற்று கையெழுத்திட்டுள்ளார்.

மேலும் நவம்பர் மாதம் மக்கள் இயக்கப் பிரசாரம் வெற்றி பெறும் என்றும் ஒவ்வொரு வாக்குகளைப் பெற கடுமையாக உழைப்பேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

# உக்ரைனுக்கு 160 கோடி டொலரை அனுப்பியது ஐரோப்பிய ஒன்றியம்



முடக்கப்பட்ட ரஷ்யாவின் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் இலபத்தைக் கொண்டு உக்ரைனுக்கு முதல் முறையாக 160 கோடி டொலரை ஐரோப்பிய ஒன்றியம் அனுப்பியுள்ளது.

இதுகுறித்து ஐரோப்பிய ஆணையத் தலைவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையின்படி,

ஐரோப்பிய யூனியன் எப்பொழுதும் உக்ரைனுக்கு ஆதரவாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக ரஷ்யாவின் முடக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற பணத்தை அந்நாட்டுக்கு அனுப்பியுள்ளதாகவும், ரஷ்யாவிடமிருந்து பாதுகாப்பைப் பெறவும் சேதங்களை மறுசீரமைக்கவும் இந்தத் தொகை அனுப்பப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உக்ரைனையும் ஐரோப்பாவையும் ரஷ்யாவிடமிருந்து பாதுகாக்க அந் நாட்டு பணத்தையே பயன்படுத்துவதுதான் சிறந்த வழி' என தெரிவிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் மீதான போரை ரஷ்யா நிறுத்த வேண்டும் எனக் கூறிவரும் உலக நாடுகள், உக்ரைனுக்கு ஆயுதங்கள் மற்றும் நிதியுதவி போன்றவற்றை செய்து வருகின்றன.

ஆனால், சில உள்ளூர் பொருளாதார நிலைமைகளினால் அந்த நிதியை அளிப்பதில் சிரமம் ஏற்படவே, முடக்கப்பட்ட ரஷ்ய சொத்துக்களின் வருவாயை உக்ரைனுக்கு வழங்கும்படி ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கூறி வந்தனர்.

இந்த செயல்பாட்டுக்கு ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்து வருவதோடு, இந்த செயல்பாட்டினால் சொத்துக்களை பாதுகாப்பாக முதலீடு செய்ய ஏற்ற இடம் என்ற பெயரை ஐரோப்பிய நாடுகள் இழந்துவிடும். இது அந்த நாடுகளின் பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கும் எனவும் எச்சரித்துள்ளது.

# மலையாள படப்பிடிப்பில் விபத்து: நடிகர் அர்ஜூன் அசோகன் காயம்





மலையாள படமான 'ப்ரோமான்ஸ்' படப்பிடிப்பில் ஏற்பட்ட விபத்தில் நடிகர் அர்ஜுன் அசோகன் மற்றும் 'பிரேமலு' பட புகழ் சங்கீத் பிரதாப் உள்ளிட்டோர் காயமடைந்தனர்.

மேத்யூ தாமஸ், அர்ஜுன் அசோகன் நடிப்பில் உருவாகி வரும் மலையாள படம் 'ப்ரோமான்ஸ்' இந்தப் படத்தை அர்ஜுன் டி.ஜோஸ் இயக்குகிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு கொச்சியில் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், நேற்று அதிகாலை 2 மணி அளவில் கொச்சியின் எம்.ஜி.சாலையில் சேஸிங் காட்சி ஒன்று படமாக்கப்பட்டது.

அப்போது உணவு வழங்கலுக்காக சென்றுகொண்டிருந்தவரின் பைக் மீது படக்குழுவினரின் கார் வேகமாக மோதி கவிழ்ந்தது. இதில் உணவு டெலிவரி செய்யும் நபரின் காலில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனே காரில் இருந்த நடிகர்களும், உணவு டெலிவரி நபரும் அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# காசாவில் மருத்துவமனை மீது தாக்குதல் குழந்தைகள் உட்பட 30 பேர் உயிரிழப்பு

காசாவில் டெயிர் அல்-பாலா பகுதியில் அமைந்துள்ள மருந்துவமனை மீது இஸ்ரேல் படைகள் நிகழ்த்திய வான்வழித் தாக்குதல்களில் குழந்தைகள் உட்பட குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என காசா சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

நேற்று நடத்தப்பட்ட இந்த கொடூர தாக்குதல்களில் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் அவர்களில் பலர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கான் யூனிஸ் நகர் அருகேயுள்ள அபாசன் நகரில் குடியிருப்புப் பகுதிகள் மீதான இஸ்ரேல் படைகளின் தாக்குதல்களில் 15 பேர் கொல்லப்பட்டிருந்தனர் என குறிப்பிடப்படுகின்றது.

பானி சுஹைலா நகரில் நிகழ்த்தப்பட்டுள்ள தாக்குதல்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

அத்துடன், போரினால் இடம்பெயர்ந்து மத்திய கான் யூனிஸ் பகுதியில் தங்கியுள்ள பலஸ்தீன மக்களின் கூடாரங்களில் நிகழ்த்தப்பட்டுள்ள தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த நிலையில், காசாவில் நேற்று இஸ்ரேல் படைகள் நிகழ்த்திய தாக்குதல்களில் 48 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என கள நிலவரங்கள் தெரிவிக்கின்றன.













# ரணிலின் தந்திரத்தில் அலைபடும் ஆடுகள்!

மறைந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசியல் வாரிசு தான் என்பதை நிரூபிப்பதற்காக தன்னுடைய 75ஆவது வயதிலும் ரணில் விக்கிரமசிங்க கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். மாமன் - மருமகன் கட்சியாக அடையாளப்படுத்தப்படும் ஐக்கிய தேசியக் கட்சியில், அதிக காலம் தலைவராக இருந்தவர் என்ற வரலாற்றை ரணில் ஏற்கனவே படைத்துவிட்டார். இப்போது, தன்னுடைய மாமனார், நாட்டின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்து அரங்கேற்றிய அத்துமீறல்களின் பாதச்சுவடுகளின் வழியைப் பற்றி தன் பயணத்தை மேற்கொள்ள எத்தனிக்கிறார்.

பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் மூர்க்கமான நகர்வுகளில் முக்கியமானது சிங்கள மொழியை மாத்திரம் ஆட்சி - நிர்வாக மொழியாக பிரகடனம் செய்வது. அதனை தென் இலங்கையில் இனவாதத்தீயாக மூட்டிப் பற்ற வைத்து பிரச்சாரம் செய்தவர்களில் முக்கியமானவர் ஜெயவர்த்தன. அப்போது, ஐ.தே.க.வில் இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க சமஷ்டிவாதியாக தன்னை முன்னிறுத்திக் கொண்டிருந்தார். ஆனால், அவர் ஐ.தே.க.வில் இருந்து பிரிந்து சிறீலங்கா சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்து ஆட்சி அதிகாரத்தை அடைவதற்காக பௌத்த அடிப்படைவாதிகளுடன் இணைந்து முழு இனவாதியாக மாறினார். அவரின் ஆட்சியில் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சுதந்திர இலங்கையில் அரை நூற்றாண்டு காலம் பண்டாரநாயக்கவும் அவரது வாரிசுகளும் ஜெயவர்த்தனவும் அவரது வாரிசுகளும் ஆட்சி நடத்தியிருக்கிறார்கள். இப்போது, நீள்வது ராஜபக்ஷ்ச்க்களின் தயவிலான ரணிலின் ஆட்சியென்றாலும், அவர் ஜெயவர்த்தனவின் வாரிசு. இந்த நாட்டை பேரழிவுக்குள் தள்ளியதற்கான பொறுப்பை, பண்டாரநாயக்க - ஜெயவர்த்தன தரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், காலத்துக்கு காலம் அப்பாவி சிங்கள பெருங்குடிகளை இனவாதத்தீயைப் பரப்பி, தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு எதிராக திருப்பி விட்டுவிட்டு ஆட்சி செலுத்தி தின்று கொழுத்திருக்கிறார்கள். ஏதேச்சதிகாரத்தின் சர்வ சக்திகளாக இருந்திருக்கிறார்கள். இது, கறுப்பு ஜூலை மாதம், அதற்கான பொறுப்பை ஜெயவர்த்தனவும், அவரது அரசியல் வாரிசான ரணிலும் ஏற்க வேண்டும். அதுவும், ஜெயவர்த்தனவின் அமைச்சரவையில் இருந்த அப்போதைய இளம் அமைச்சரான ரணிலுக்கு, அரச பயங்கரவாதத்தின் கூட்டுப் பொறுப்பு உண்டு. அதனை அவர் ஒருபோதும் புறந்தள்ள முடியாது.



புருஜோத்தமன் தங்கமயில்

தற்போது செயற்பாட்டு அரசியலில் இருக்கும் அரசியல்வாதிகளில் மிகப்பெரும் தந்திரசாலியாக ரணில் பார்க்கப்படுகிறார். தங்களின் ஆட்சிக் காலம் முழுவதும் கட்சிகளையும், இயக்கங்களையும், பௌத்த பீடங்களையும் பிரித்தாண்ட ராஜபக்ஷக்களே, ரணிலின் பிரித்தாளும் தந்திரத்தின் முன்னால் அழுது வடிக்கிறார்கள். ராஜபக்ஷக்கள் தோள் கொடுத்ததினால்தான், தனக்கு எப்போதுமே எட்டாக்கனியாக இருந்த ஜனாதிபதி பதவியை ரணில் அடைந்தார். ஆனால், ராஜபக்ஷக்களின் தோளில் அமர்ந்தவாறே, ராஜபக்ஷக்களின் தலையான பெரமுன என்கிற கட்சியை இரண்டாக பிளந்தவர் அவர். அதனை, இளைய ராஜபக்ஷவான நாமல் சில நாள்களுக்கு முன்னால் வெறுப்பின் உச்சத்தில் ஊடகங்களிடம் தெரிவித்தார். அதுவும், ரணில் ஏற்கனவே புலிகளை இரண்டாக பிரித்தவர் என்கிற உதாரணத்தையெல்லாம் கோடிக் காட்டியம்சி, ராஜ பக்ஷக்களின் வரலாற்றுச் சோகமே.

ரணில், ஜனாதிபதித் தேர்தலில் எப்படியாவது வென்றாக வேண்டும் என்கிற மூர்க்கத்தனத்துடன் செயற்படுகிறார். அவர், உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளை உதாசீனம் செய்கிறார். அதுவும், பொலிஸ்மா அதிபர் விடயத்தில் அவர், நாடாளுமன்றத்துக்குள் விடயங்களைத் தள்ளிவிட்டு தப்பிக்க நினைப்பதெல்லாம், அத்துமீறல்களின் உச்சம். நல்லாட்சிக் காலத்தில், மைத்திரிபால சிறிசேன, ராஜபக்ஷக்களுடன் இணைந்து சதிப்புரட்சி மூலம் ஆட்சி மாற்றமொன்றைச் செய்ய எத்தனித்தார். ஆனால், அப்போது அலரி மாளிகைக்குள் இருந்த ரணில், தன்னையொரு ஜனநாயகத்தின் காவலனாக - நீதித்துறை மீது நம்பிக்கை கொண்டவர் போல - காட்டிக் கொள்வதில் குறியாக இருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்து மறைந்த இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் ரணிலுக்காக சதிப்புரட்சியை தோற்கடிப்பதற்காக உயர்நீதிமன்றத்தில் நீண்ட சட்டப் போராட்டங்களை நடத்தி, வென்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அதே ரணில், உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளைப் புறந்தள்ளிவிட்டு, ஜெயவர்த்தனவின் வாரிசு தான் என்பதை நிரூபிக்கிறார்.

ராஜபக்ஷக்களின் கட்சியை இரண்டாக பிளந்து

தொடர்ச்சி▼



# ரணிலின் தந்திரத்தில் அலைபடும் ஆடுகள்!

தொடர்ச்சி▲

விட்ட ரணில், தனக்கு எதிரான வெற்றி வேட்பாளர்கள் என்று கணிக்கப்படும் சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸநாயக்கவை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் தற்போது கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார். சஜித்தோடு இருந்த சரத் பொன்சேகாவை, பிரித்தெடுத்த ரணில், அவரை ஜனாதிபதி வேட்பாளர் வேடம் போட வைத்திருக்கிறார். அதன்மூலம், சஜித்துக்குக் கிடைக்கும் வாக்குகளின் அளவைக் குறைக்கலாம் என்பது அவரது திட்டம். தேசிய மக்கள் சக்தியில் இருந்த சோசலிச முற்போக்கு இயக்கமொன்று கடந்த சில நாள்களுக்கு முன்னர், அதிலிருந்து விலகியது. அந்த இயக்கம், அநுர ஜனாதிபதி பதவிக்கு தகுதியற்றவர் என்று பிரசாரத்தைத் தொடங்கிவிட்டது. இப்படி ரணில் அனைத்துப் பக்கங்களிலும் இருந்தும் தனக்கு எதிரான சக்திகளின் பலத்தை வெட்டிக் குறைப்பதில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்.

ராஜபக்ஷக்கள் கட்சியை எப்படிக் காப்பாற்றுவது என்ற நிலைக்கு இப்போது தள்ளப்பட்டிக்கிறார்கள். அதுவும் ராஜபக்ஷ சகோதரர்களுக்கு இடையிலேயே கண்ணாமூச்சி ஆட்டத்தை ரணில் தொடங்கிவிட்டார். பஸில் ராஜபக்ஷ ஒரு பக்கம் இழுக்க, மஹிந்த ராஜபக்ஷ தன்னுடைய மகனுக்காக போராட வேண்டியிருக்கின்றது. ராஜபக்ஷக்களின் பலமே, அவர்களின் சகோதரர்களுக்கு இடையிலான ஒற்றுமை. அவர்கள், தென்னிலங்கை அரசியலில் பலம்பெற்று பெருஞ்சக்தியாக மாறியதும் அப்படித்தான். ராஜபக்ஷக்களை நாட்டு மக்கள் வீதிக்கு இறங்கி ஆட்சிக் கட்டிலில் இருந்து துரத்தியடித்தாலும், அவர்களுக்குப் பின்னால் திரள்வதற்கென்று மக்கள் கூட்டமொன்று இன்னமும் உண்டு. அவர்களினால் கூட்டத்தைச் சேர்க்க முடியும். இப்போது ஆட்சியைப் பிடிக்கும் வல்லமை இல்லாமல் இருக்கலாம், ஆனால் இன்னும் சில காலத்துக்குள் மீளவும் ஆட்சியை அடைவதற்கான வல்லமை அவர்களிடம் உண்டு. அதற்கு அவர்களின் ஒற்றுமை அவசியம். இப்போது, அதில்தான் ரணில் கல்லெறிந்து கொண்டிருக்கிறார். அடுத்த ஆட்சிக் காலத்தில் தனக்குப் பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு ரணில் பின்னால் பஸில் அலைந்து கொண்டிருக்கிறார். ஆனால், ரணிலோ பிடிகொடுக்காமல் அலைய விடுவதில் குறியாக இருக்கிறார். அத்தோடு, தன்னுடைய பிடிக்குள் இருந்து ராஜபக்ஷ்ச்க்களை விலகி விடாமலும் பார்த்துக் கொள்ள முயல்கிறார். இப்போது, பெரமுனவின் முப்பத்துக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், ராஜபக்ஷக்களிடம் ரணிலுக்காக அழுத்தம் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

மறைந்த சம்பந்தனின் மரணச் சடங்கில் கலந்து கொண்டிருந்த மஹிந்த, முன்னாள் ஊடகவியலாளர் ஒருவரிடம், தங்களிடம் பொருத்தமான ஜனாதிபதி வேட்பாளர் இல்லை என்று கூறியிருக்கிறார். வர்த்தகர் தம்மிக்க பெரேராவை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தும் திட்டத்தை நாமல் உள்ளிட்டவர்கள் கொண்டிருந்தாலும், அது கட்சியை மிகமோசமாக உடைப்பதற்கு காரணமாக அமைந்துவிடும் என்று மஹிந்த நினைக்கிறார். அதனால்தான், தங்களிடம் பொருத்தமான வேட்பாளர் இல்லை என்ற விடயத்தில் அவர் இருப்பதற்கு காரணமாகும். ஆனால், இளம் கன்று பயமறியாது என்ற அடிப்படையில் நாமல், ரணிலுக்கு ஆதரவளிப்பதைக் காட்டிலும் தனித்து நின்று அடுத்த பொதுத் தேர்தலைக் குறிவைத்து நகர்வுகளை முன்னெடுக்க நினைக்கிறார். அதன் மூலம், பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை அடைய முடியும் என்பது அவரது எதிர்பார்ப்பு. ஆனால், அந்த வாய்ப்புக்களை பெரமுனவின் ஒரு பகுதியினரையும் வைத்து ரணில் முறியடிக்கத் துடிக்கிறார்.

ஆட்சி அதிகாரத்துக்காக எந்த வகையிலான சதியாட்டத்தையும் ஆடலாம் என்பது விலங்குகளின் வேட்டை மனநிலையில் இருந்து வந்த உணர்வு. அதனை, ரணில் இப்போதும் தீர்க்கமாக நம்புகிறார்.

தொடர்ச்சி▼





# ரணிலின் தந்திரத்தில் அலைபடும் ஆடுகள்!

**தொடர்ச்சி▲**

விலங்குகள் தங்களின் வயதான காலத்தில் மூர்க்கத்தனத்தை இழந்து வலுவிழந்து அனாதையாகி வீழும். ரணிலும் கடந்த பொதுத் தேர்தலில் அப்படித்தான் வீழ்ந்தார். ஆனால், அவருக்கு மீண்டும் உரமேற்றியது ராஜபக்ஷக்கள். அதற்கான விலையை இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போது ரணில் வேட்டையாடும் வல்லமையோடு இல்லையென்றாலும், மற்றவர்களை வைத்து வேட்டையாடி, அவர்கள் கொண்டு வருவதை ஆண்டு அனுபவிக்கும் இடத்தில் இருக்கிறார்.

ரணில் ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்ததும், அனைத்துக் கட்சிகளிலும் தனக்கான ஆட்களை மெல்ல மெல்ல தேடிக் கொண்டார். அதுபோல, அரசியலில் ஆளுமை செலுத்தும் சக்திகளையும் அடையாளம் கண்டு அரவணைக்கத் தொடங்கினார். நாடாளுமன்றத்துக்குள் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்வுக்கான வாக்கெடுப்பிலேயே, தமிழ்த் தேசிய வாதிகளாக தங்களை முன்னிறுத்திய கூட்டமைப்பின் உறுப்பினர்களை பிரித்தாண்டு, அவர்களின் வாக்குகளை ரணில் பெற்றிருக்கிறார். அதனை, அவர், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்திலேயே பெருமையாகத் தம்பட்டம் அடித்த காட்சிகள் எல்லாமும் அரங்கேறின.

கூட்டமைப்பில் தீர்மானங்களை எடுத்து வந்த சம்பந்தனும் எம்.ஏ.சுமந்திரனும் தன்னுடைய இணக்கமான வட்டத்துக்குள் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட ரணில், கூட்டமைப்புக்குள் புதிய நட்புக்களைத் தேடத் தொடங்கினார். அதற்காக சலுகைகளை வழங்கினார். அதனை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடக்கம் பல வடிவங்களில் காண முடியும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வந்த வரியற்ற வாகன இறக்குமதிக்கான தடை தற்போது உள்ளதால், பலரும் அல்லாடத் தொடங்கினர். இதனை, உணர்ந்து கொண்ட ரணில் அரசாங்கம் பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மதுபான சாலைகளை அமைப்பதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கியதாக எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ் சாட்டுகிறார். அந்த அனுமதிப்பத்திரங்களில் சில, தமிழ்த் தேசியம் பேசி, மாவீரர் நாளில் விளக்கேற்றி அஞ்சலித்து உணர்வு மேலிட நிற்கும் சில கூட்ட மைப்பின் - தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன என்ற தகவல்கள் வெளியாகின்றன. அந்தத் தகவல்கள், ஆதாரங்களோடு பொதுத் தேர்தல் காலத்தில் பிரச்சார காலத்தில் உலா வரும் வாய்ப்புண்டு. இந்தச் சலுகைகள், ஜனாதிபதித் தேர்தலில் தன்னை ஆதரிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளின் போக்கில் வழங்கப்பட்டவை எனக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

ஏற்கனவே, பிளவுண்ட கூட்டமைப்பின் ஒரு தரப்பினர் (ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி), தமிழ்த் பொது வேட்பாளர் என்ற விடயத்தைத் தூக்கிக் கொண்டு வந்த போதே பெரும் சந்தேகம் எழுந்தது. குறிப்பாக, சஜித்துக்கு கிடைக்கும் தமிழ் வாக்குகளை மடைமாற்றம் செய்யும் நோக்கத்தையே பொது வேட்பாளர் விடயம் நிறைவேற்றப் போகின்றது என்பது. தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் சலுகை ஆதாயம் தேடும் அரசியல்வாதிகள் பலர் இருக்கிறார்கள். ஆனால், அதனை தங்களின் தலை மேல் தூக்கிச் சுமக்கும் சில அரசியல் பத்தியாளர்கள், தங்களின் தன்முனைப்பு மனநிலையினால், ரணிலுக் கான வெற்றி வாய்ப்பை அதிகரிப்பதற்கான வேலை களில் மறைமுகமாக ஈடுபடுகிறார்கள்.

மலையக தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இன்னமும் பெருமளவான மக்கள் சஜித்தை ஆதரிக்கும் மனநிலையிலேயே இருக்கிறார்கள். ரணில் மலையக மக்களுக்கான சம்பள அதிகரிப்பு என்ற நாடகத்தை அரங்கேற்றி ஆதாயம் தேட முனைந்தார். ஆனால், அதனை தோட்டக் கம்பனிகள் நீதிமன்ற உத்தரவினூடு தடுத்து நிறுத்திவிட்டன. உண்மையாகவே தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்புத் தொடர் பில் அக்கறை இருந்திருந்தால், முறையான தொழில் - அரசியல் தீர்மானங்களில் ஊடாக சம்பள அதிக ரிப்பைச் செய்திருக்க வேண்டும். மாறாக, மேம்போக் கான தேர்தல் இலக்கு நகர்வுகளைச் செய்திருக்க மாட்டார்கள். அதிலும், சிறுபிள்ளை வேளாண்மை போன்று, ஜீவன் தொண்டமானைக் கொண்டு அவர் ஆடும் ஆட்டம் அபத்தமானது.

செம்டம்பர் 21ஆம் திகதி, ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு இடம்பெறும் காலத்துக்குள் இன்னும் ஏராளமான பிளவுகளையும், சதியாட்டங்களையும் ரணில் ஆடுவார். அதில், யார் மாட்டிக் கொண்டு மக்களை பகடைக்காய்களாக மாற்றப்போகிறார்கள் என்றுதான் தெரியவில்லை. ஆனால், அந்த தந்திரசாலியான நரி, இறுதிக் கணம் வரை, ஜே.ஆரின் வாரிசாக நின்று அதிகாரத்துக்காக ஓயாது உழைக்கும்.







# ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலைப் படுகொலை நினைவஞ்சலி நேற்று

கறுப்பு ஜூலைப் படுகொலையின் 41 ஆம் ஆண்டுநினைவேந்தலும் பொதுக் கூட்டமும் யாழில் நேற்று மாலை நடைபெற்றது.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஏற்பாட்டில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்னம் தலைமையில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்க மண்டபத்தில் இந்த நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன் போது கடந்த 1983 ஆம் ஆண்டு ஜூலை 25-27 ஆம் திகதிகளில் வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட 53 அரசியற் கைதிகள் உள்ளிட்ட அனைவரையும் நினைவு கூர்ந்து நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் வெலிக்கடை சிறையில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் பொதுச் சுடரை ஏற்றி வைத்தமையைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டிருந்த ஏனையவர்களும் சுடரேற்றி மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

இந்நினைவேந்தல் நிகழ்வில் நாடாளுமன உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், என்.சிறிகாந்தா உள்ளிட்ட ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் மற்றும் ஜுல்சிக் கலவரத்தில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.












# விக்கிரமபாகு யாழில் நேற்று நினைவஞ்சலி

தமிழர்களுக்காக குரல் கொடுத்த இடதுசாரித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன விற்கு யாழில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட தலைமை அலுவலகத்தில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் பொன்மாஸ்டர் தலைமையில் நேற்று மாலை இந் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது விக்கிரம்பாகு கருணாரட்னவின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ் நினைவஞ்சலி நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்பள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.












# இலங்கை உள்ளிட்ட 55 நாடுகளுக்கு இலவச விசா வழங்குகிறது அல்ஜீரியா

## அல்ஜீரியாவிடமிருந்து இலவச விசா

இலங்கை உள்ளிட்ட 55 நாடுகளுக்கு இலவச விசா திட்டத்தை அல்ஜீரியா அறிமுகப்படுத்தியுள்ளது.

புதிய விசா கொள்கையை அறிமுகப்படுத்தியதன் மூலம் வட ஆபிரிக்க நாடுகளின் சுற்றுலாத்துறை முன்னேற்றம் அடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அல்ஜீரியாவில் சுற்றுலாப் பயணிகளுக்கான பயண நடைமுறைகளை இலகுவாக்குவதன் மூலம் சுற்றுலாவை மேம்படுத்த இந்தப் புதிய இலவச விசா கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அல்ஜீரியா தெரிவித்துள்ளது.



# 32 ரயில் சுரங்கங்களின் தரம் தொடர்பில் ஆராய்வு

மலையக ரயில் மார்க்கத்தின் நாவலப்பிட்டியிலிருந்து பதுளை வரையான 32 ரயில் சுரங்கங்களின் தரம் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் மார்க்கத்தின் கண்காணிப்பு முகாமையாளர்களினால் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, ரயில் சுரங்கங்களில் காணப்படும் நீர் கசிவு, தொழில்நுட்ப கோளாறுகள், வெடிப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.




# தேர்தல் காலப் பணியில் விசேட பொலிஸ் பிரிவு

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக, தேர்தல் விவகாரங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் கடமைக்கு மேலதிகமாக ஒரு பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதி பொலிஸ் மா அதிபர் பீ.லியனகே மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கே.டீ.ஜீ.எல்.ஏ தர்மசேன ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பொலிஸ் தலைமையகத்தில் தேர்தல் விவகாரங்களுக்காக விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் அந்த பிரிவுக்குப் பொறுப்பதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதை குறிப்பிடத்தக்கது.






# பொலிஸ் அதிகாரிகள் 210 பேரின் இடமாற்றக் கோரிக்கை நிராகரிப்பு

ஒரே நேரத்தில் 210 பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றம் செய்யுமாறு பொலிஸ் மா அதிபர் தரப்பிலிருந்து விடுத்த கோரிக்கையை தேசிய பொலிஸ் ஆணைக்குழு நிராகரித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட இடமாற்றக் கொள்கையின்படி பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற காரணத்தினால் அவை நிராகரிக்கப்பட்டன எனக் கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் வேளையில் இவ்வாறு அதிகளவான இடமாற்றங்களை வழங்குவது பொருத்தமானதல்ல என தேசிய பொலிஸ் ஆணைக்குழு பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளது.



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி; விசாரணைகள் நிறைவுபெற்றனவாம்

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் இடம்பெறும் முறைகேடுகளுக்கு எதிரான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என வெளிநாட்டு வேலைவாய்ப் புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அந்தப் பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள், உடனடியாக விசாரிக் கப்பட்டு குற்றவாளிகளுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய் யப்பட்டுள்ளன என அந்தப் பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த 5 நாள்களில் மாத்திரம், வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாகத் தெரிவித்து மோசடிகளில் ஈடுபட்ட 12 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

# 17 வயதுக்குள் பாடசாலை கல்வியை முடிப்பதற்கு கல்வி அமைச்சு திட்டம்

கல்விச் சீர்திருத்த முன்மொழிவு தொடர்பில் பாடசாலையின் தரங்களின் எண்ணிக்கை 13 இலிருந்து 12 ஆக குறைக்கப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனை 2025 ஆம் ஆண்டின் முதல் தவணையில் முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதுடன் மாணவர்கள் 17 வயதிற்குள் பாடசாலையை முடிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மதிப்பீடுகளுக்கு புள்ளிகளையும் பரீட்சைகளுக்கு குறிப்பிட்ட சதவீத புள்ளிகளையும் வழங்கி பரீட்சையை இலகுபடுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத் தேர்விற்கான பாடங்களை 9 இல் இருந்து 7 ஆகக் குறைக்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 32 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாடளாவிய ரீதியில் 32 ஆயிரத்து 78 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 12 பேர் டெங்கு நோய் காரணமாக உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




# அஸ்வெசும 2 ஆம் கட்டக் கணக்கெடுப்பை 31 ஆம் திகதிக்குள் நிறைவு செய்யத் திட்டம்

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டம் தொடர்பான கணக்கெடுப்பை எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தவறிய குடும்பங்களுக்கு, முதற்கட்டமாகக் கடந்த பெப்ரவரி மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கமைய சுமார் 454,924 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.



# அதிக விலைக்கு பாண் விற்றால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

50 கிராம் பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், புதிய விலைக்கு பாண் விற்பனை செய்யாத உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய இது தொடர்பில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.07.2024




இன்று நீங்கள் அமைதியுடன் ரிலாக்ஸ்டாக இருக்க வேண்டிய நாள். உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உங்கள் பிரியமானவர்களிடம் சரியான முறையில் தகவலை பரிமாறத் தவறுவீர்கள்.

உத்தியோக சூழ்நிலை இன்று உங்களுக்கு சாதகமாக இல்லை. உங்கள் கீழ் பணிபுரிவோருடன் மோதல்கள் ஏற்படலாம். கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று நீங்கள் உங்கள் துணையாருடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவை பாதிக்கும்.

இன்று அதிகமான செலவினங்கள் ஏற்படும். உங்கள் பணத்தை நன்கு நிர்வகிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கடின உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமானதாக இல்லை. உங்கள் முயற்சியில் தாமதங்களை எதிர்கொள்வீர்கள். வெற்றி பெறுவதற்கு நல்ல திட்டமிடல் தேவை. தன்னம்பிக்கை குறைந்து காணப்படும்.

பணியிடத்தில் வேலை அதிகமாக இருக்கும். தவறுகள் நேராமல் இருப்பதற்கு கவனமாக வேலை செய்ய வேண்டும்.

இன்று சரியான புரிந்துணர்வு இல்லாத காரணத்தால் நீங்கள் உங்கள் துணையிடம் உணர்வுகளை சரியான முறையில் வெளிப்படுத்த தவறுவீர்கள்.

இன்று பண இழப்புகள் காணப்படுகின்றன. உங்கள் அலட்சிய மனப்பான்மை பண இழப்பிற்கு வழிவகுக்கும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்பிருப்பதால் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டியிருக்கும்.




பொறுமையின்மை மற்றும் உறுதியின்மை காரணமாக நீங்கள் முன்னேற இயலாது. இதனால் பதற்றமான சூழ்நிலை காணப்படும். இந்தச் சூழ்நிலையை சமாளிக்க உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்துங்கள்.

உத்தியோக சூழ்நிலை இன்று உங்களுக்கு சாதகமாக இல்லை. சக பணியாளர்களிடம் கவனமாகப் பழகவும். அவர்களால் பிரச்சினைகள் நேரலாம்.

குடும்ப பிரச்சினைகள் காரணமாக சில தொல்லைகள் ஏற்படும். உணர்ச்சிவசப்படுவதை தவிர்த்து விடுங்கள். உங்கள் துணையாருடன் வெளிப்படையாகப் பேசுங்கள்.




இன்று நீங்கள் இலட்சியத்தை அடையும் ஆற்றலுடன் திகழ்வீர்கள். உங்கள் உறுதியும் தைரியமும் நல்ல விளைவுகளை உருவாக்கும். திறமையான தகவல் பரிமாற்றத்தின் மூலம் நீங்கள் மிகுந்த பலனடைவீர்கள்.

பணியில் உங்கள் திறமைகளை காட்டுவீர்கள். ஆர்வத்துடன் பணியாற்றுவீர்கள். உங்கள் செயலுக்காக பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். சிறந்த மற்றும் ஆழமான புரிந்துணர்வை ஏற்படுத்த அது உதவும்.

இன்று நிதிநிலைமை மிகவும் பிரகாசமாக இருக்கிறது. இன்றைய தினம் பயனுள்ள முதலீட்டுக்கான முடிவுகளை எடுக்க சாதகமானதாக உள்ளது.




இன்று நீங்கள் வெறுமையையும் பாதுகாப்பற்ற தன்மையையும் உணர்வீர்கள். எந்தவொரு விஷயத்தையும் சீரியஸாக எடுத்துக் கொள்ளாமல் இலேசாக எடுத்துக் கொள்ளுங்கள். சமநிலையோடு அணுகாவிட்டால் விஷயங்கள் உங்கள் கைமீறிப் போய்விடும்.

வேலையில் பிரகாசிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது. உங்கள் திறமைகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் செயல்திறன் உங்கள் தரத்தையும் திறமையையும் வெளிக்காட்டும்.

இன்று அன்யோன்யமும் அன்பும் அதிகமாக காணப்படும். நீங்கள் உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள்.உங்கள் கடின உழைப்பினால் பணம் சம்பாதிக்க முடியும்.




உங்கள் முக்கியமான விஷயங்களைக் கூட இன்று சரியான நேரத்தில் முடிப்பதில் தாமதம் ஏற்படும். திரைப்படம் பார்ப்பதன் மூலம் அல்லது பாடல்களைக் கேட்பதன் மூலம் நீங்கள் நன்றாக உணர்வீர்கள். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு இன்றைய நாள் ஏற்புடையதல்ல.

வேலைச் சுமை அதிகமாக இருக்கும். திட்டமிட்டு ஒழுங்கமைப்பதன் மூலம் உங்கள் வேலையை நன்றாகச் செயல்படுத்த முடியும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான மற்றும் திருப்திகரமான நல்லுறவைப் பேண நீங்கள் உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணவரவு குறைந்து காணப்படும். எனினும் பரம்பரை சொத்துக்கள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.




இன்றைய நாள் உங்களுக்கு முக்கியமான இலட்சியங்களை அடைவதற்கு நல்ல வாய்ப்புடன் கூடிய பிரகாசமான நாள். உங்கள் எதிர்பார்ப்பைக் காட்டிலும் நல்ல பலன்கள் கிட்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

அதிகமான வேலைப்பளு உங்களை ஆக்கிரமித்து உங்களை பிஸியாக வைத்திருக்கும். அதிகப்படியான வேலை காரணமாக பணியில் தவறுகள் நேரலாம்.

சமநிலை நோக்கும் நகைச்சுவை அனுகுமுறையும் உங்கள் துணையை நீங்கள் நன்கு புரிந்து கொள்ள உதவும். உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள மன அமைதியுடன் பேசுங்கள்.இன்றைய அதிகப்படி பணவரவால் உங்களின் சேமிப்பு உயரும்.




இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். நீங்கள் எதிர்பாராத வெற்றிகள் உங்களுக்கு ஆழ்ந்த திருப்தியை உண்டாக்கும். இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். விருந்தாளிகளின் வருகை மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கும்.

குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட முடிப்பீர்கள். உங்கள் வேலை சம்பந்தமாக நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். நீங்கள் உறுதியான அணுகுமுறையுடன் பணிபுரிவீர்கள்.

உங்கள் துணையுடன் ஒன்றிணைந்து மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் ரிலாக்ஸ்டாக இருப்பீர்கள். இன்றைய நாள் உங்களுக்கு வசீகரமானதாக அமையும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.07.2024




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை. முடிவெடுப்பதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். உங்கள் அன்புக்குரியவர்களுடன் வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் உங்களுக்கு உற்சாகமான வாய்ப்புகள் கிடைக்கும். அலுவலகச் சூழல் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் இனிமையான மற்றும் ஊக்கமான வார்த்தைகள் உங்கள் துணையை திருப்தியடையச் செய்யும். இனிமையான தருணங்களை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள்.

பணவரவு குறைந்து காணப்படும். இழப்பு ஏற்டா வண்ணம் பணத்தை பத்திரமாக பாதுகாக்க வேண்டும் மற்றும் சேமிக்க வேண்டும்.




இன்று நீங்கள் வெற்றி பெறுவதற்கு உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். உங்கள் முயற்சிகளில்இன்று நீங்கள் பின் தங்கி இருப்பீர்கள். சிறந்த யுக்திகளின் மூலம் உங்கள் இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டும். பணியிடத்தில் மேலதிகாரியுடன் சண்டைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. உங்கள் மனதை அமைதியாக வைத்திருங்கள். மேலதிகாரியை அனுசரித்து நடந்துகொள்ளுங்கள். எதிர்மறை எண்ணங்களை களைந்து விடுங்கள். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் சந்தேக உணர்வுக்கு ஆட்பட்டு அதை உங்கள் துணையிடமும் வெளிப்படுத்துவீர்கள்.




இன்று நற்பலன்கள் கிடைக்கும் நாள். மன உறுதி மூலம் இன்று நீங்கள் உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். உங்கள் முயற்சிகள் மற்றும் உறுதி நேர்மறையான விளைவுகளுக்கு வழிவகுக்கும்.

பணியில் சிறந்த வளர்ச்சி காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அந்த வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

சோர்வான மனநிலை காரணமாக உங்கள் துணையை தவறாக புரிந்து கொள்வீர்கள். அமைதி மற்றும் எளிதான அணுகுமுறை மூலம் நீங்கள் நல்ல புரிந்துணர்வை வளர்க்க முடியும்.

பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். கிடைக்கும் அதிகப்படி பணத்தை உங்களால் சேமிக்க முடியும்.




இன்று உங்களிடம் காணப்படும் தாழ்வு மனப்பான்மை காரணமாக சிறிது அவநம்பிக்கையோடு காணப்படுவீர்கள். அதனால் இன்று சற்று பின்தங்கியிருப்பீர்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். உங்கள் சக பணியாளர்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பார்கள். இதனால் உங்களுக்கு கவலை ஏற்படும்.

உங்களின் இனிமையான பேச்சால் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த உதவும்.

அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும். அதனால் சேமிப்பு குறைந்து காணப்படும். இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.













# செலான் வங்கி Lean Six Sigma மஞ்சள், பச்சை பட்டிகளின் அங்கீகாரத்தை கொண்டாடுகிறது





செலான் வங்கி ஒன்பது Lean Six Sigma மஞ்சள் பட்டிகள் மற்றும் ஏழு Lean Six Sigma பச்சை பட்டிகள் ஆகியவற்றின் அங்கீகாரத்தை பெருமையுடன் அறிவித்தது. இது செயற்பாட்டு சிறப்பு மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான அதன் அர்ப்பணிப்பில் குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்.

அண்மையில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதிப் பொது முகாமையாளர் – செயற்பாடுகள் மலிக் விக்கிரமநாயக்க் அஸ்ட்ரிட் இட்டமல்கொட, உதவி பொது முகாமையாளர் – செயற்பாடுகள் சஞ்சய வல்பிட, பயிற்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் ரன்மோர் வன்டோர்ட், சிரேஷ்ட முகாமையாளர் வணிக செயன்முறை மறு–பொறியியல் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்

2019 ஆம் ஆண்டில் மஞ்சள் பட்டி மட்டத்தில் டுநயளெ ளுஐை ளுபைஅய பயிற்சி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, செலான் வங்கி பல்வேறு தளங்களில் அதன் முக்கிய செயற்பாட்டு மேம்பாடுகளை இலக்காகக் கொண்ட திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இந்த முன்முயற்சிகள், சேவை விநியோக காலக்கெடுவை சீர்செய்தல், நுகர்வுப் பயன்பாட்டை மேம்படுத்துதல், பிழைக் குறைப்பு மூலம் சேவைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் நிலையான வணிக வளர்ச்சியை ஊக்குவிக்க பணியாளர்களின் செயல்திறனை அதிகரித்தல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

செலான் வங்கியின் அனுபவமிக்க மற்றும் சான்றளிக்கப்பட்ட Lean Six Sigma Master கறுப்பு பட்டி மற்றும் Lean Six Sigma கறுப்பு பட்டி பயிற்சியாளர்களின் வழிகாட்டுதலின் கீழ், செயற்திட்டங்கள் கடுமையான தர வரையறைகளை சந்திக்கின்றமையை உறுதி செய்வதுடன் சான்றளிப்பு செயல்முறை கடினமான ஒப்புதல் நெறிமுறைகளை கடைபிடிக்கிறது. மஞ்சள் பட்டி பயிற்சியின் வெற்றியை தொடர்ந்து, அண்மைய விழாவின் போது செயற்பாட்டு சிறப்புத் திட்டத்தின் கீழ் பச்சைப் பட்டிகளின் ஆரம்ப அணியை சான்றளித்து, செலான் வங்கி பச்சை பட்டி பயிற்சியை அறிமுகப்படுத்தியது.

செலான் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்) மலிக் விக்கிரமநாயக்க, நிறுவனம் முழுவதும் தொடர் முன்னேற்றத்திற்கான கலாச்சாரத்தை வளர்ப்பதே இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முதன்மை நோக்கம் என வலியுறுத்தினார்.

”எங்கள் ஊழியர்களுக்கு Lean Six Sigma மஞ்சள் மற்றும் பச்சை பட்டி சான்றிதழ்களை வழங்குவது, மாற்றத்தை நோக்கி அவர்களை ஊக்குவிப்பதுடன் செயற்பாட்டு சிறப்புத் திட்டத்தை செயற்படுத்தவும் வங்கிக்குள் அறிவைப் பகிர்ந்து கொள்ளவும் உதவுகிறது.” என அவர் மேலும் தெரிவித்தார்.




# ACEF உலகளாவிய வாடிக்கையாளர் ஈடுபாடு விருதுகளில் கிராண்ட் பிரிக்ஸ், தங்க விருதுகளைத் தனதாக்கும் AIA

பெருநிறுவன வர்த்தகநாமப் பிரிவில் இலங்கையின் மிகவும் விரும்பப்படும் காப்புறுதி நிறுவன வர்த்தக நாமப் பிரிவில் AIA இன்சூரன்ஸ் புகழ்பெற்ற ACEF உலகளாவிய வாடிக்கையாளர் ஈடுபாடு விருதுகளில் வெற்றி பெற்று இரட்டை வெற்றியினைத் தனதாக்கியிருந்தது.

நிறுவனத்தின் பரிபூரணமான உலகளாவிய ஆரோக்கியக் காப்பீடான 'AIA ஹெல்த் பாஸ்போர்ட் ரைடர்' எனும் நிறுவனத்தின் புதுமையான திட்டம் 'வாடிக்கையாளர் ஈடுபாடு கொண்ட வர்த்தக நாமம்' பிரிவில் அனைவரினாலும் மிகவும் விரும்பப்படும் கிராண்ட் பிரிக்ஸ் விருதை வெற்றி பெற்றுள்ளது.

அதேவேளை, நிறுவனத்தின் நீண்டகால ஊளுசு 'பொசன் பாதுகாப்புத் திட்டத்தினை' 'பெருநிறுவன சமூகப் பொறுப்பு செயல்பாட்டிற்காக டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பொறிமுறையினை வெற்றிகரமாகப் பயன்படுத்தல்' எனும் மூலோபாயத்திற்கு அமைவாக நிறுவனம் மேற்கொண்டு வருவதனால் இந்த வகையிலும் யுஐயு தங்க விருது ஒன்றினைத் தனதாக்கியிருக்கின்றது.

உலகெங்கிலுமிருந்து இந்த விருதினை வெற்றி பெறுவதற்காக இதற்காகப் போட்டியாக வழங்கப்பட்ட மிகவும் கவர்ச்சிகரமான 613 சமர்ப்பிப்புகளில் AIA ஸ்ரீலங்கா வெற்றி பெற்றதன் மூலம் மிகவும் கடுமையான போட்டிக்கு மத்தியில் இக்குறிப்பிடத்தக்க சாதனையை நிறுவனம் நிகழ்த்தியிருக்கின்றது.

ACEF உலகளாவிய வாடிக்கையாளர் ஈடுபாடு விருதுகள் நிறுவனம் தற்போது அவர்களின் 13 ஆவது ஆண்டில் தடம்பதித்து பல்வேறு தொழிற் துறைகளில் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய சந்தைப்படுத்தல் உத்திகளில் மிகச்சிறந்த சாதனைகளை அங்கீகரித்துக் கௌரவிக்கின்றது.

யுஐயு ஸ்ரீலங்காவின் வெற்றியானது இலங்கையின் பிரதான உள்ளூர் வங்கித் துறை மற்றும் நிதியியல் வர்த்தக நாம நிறுவனங்கள் மத்தியில் மிகச்சிறந்த தனக்கான-தொரு தனியான இடத்தையே தக்கவைத்திருக்கின்றது. AIA ஸ்ரீலங்கா ஏற்கனவே ஸ்திரமான நிலையில் இருக்கும் தொழில்துறை வல்லுநர்களுக்கு எதிராக வெற்றிகரமாகப் போட்டியிட்டு அதன் மூலமாக தனது புதுமையான வாடிக்கையாளர் மற்றும் வர்த்தகநாம ஈடுபாடு முயற்சிகளின் தனது சக்தியை வெளிப்படுத்தியுமிருந்தது.

கிராண்ட் பிரிக்ஸ் விருதினை வெற்றி பெற்ற AIA ஹெல்த் பாஸ்போர்ட் ரைடர் காப்புறுதித் திட்டமானது தொழில் துறையில் காணப்படும் ஒரு முன்னணியான மற்றும் புரட்சிகரமான ஆரோக்கியக் காப்புறுதித் திட்டம் ஆகும். இது அனைத்து இலங்கையர்களுக்கும் உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் மிகச்சிறந்த சுகாதாரச் சேவையினையே வழங்கி வருகின்றது.

அனைத்தையும் உள்ளடக்கிய இக்காப்புறுதித் திட்டத்தீர்வானது ஒப்பிட முடியாத சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத் தீர்வுகளின் இணையற்ற சூழல் அமைப்பு



ஒன்றினையே மக்களுக்கு வழங்குகின்றது.

ஆரோக்கிய மற்றும் நல்வாழ்வுத் தீர்வுகளை வழங்குவதில் AIA ஸ்ரீலங்காவின் அர்ப்பணிப்பானது இலங்கையில் வாடிக்கையாளரை மையப்படுத்திய ஆரோக்கியக் காப்புறுதித் தீர்வுகளை வழங்கும் நிறுவனங்கள் மத்தியில் தன்னை முதன்மைப்படுத்தியிருப்பதானது இந்த விருதினை யுஐயு இற்கு வழங்குவதில் நடுவர்கள் மத்தியில் மிகவும் வலிதானதொரு காரணமாகவே அமைந்திருந்தது.

AIA ஸ்ரீலங்காவின் பொசன் பாதுகாப்புத் திட்டமானது இதன்போது தங்க விருதினை வெற்றி பெற்றிருப்பதானது இவ்வாறான நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு மற்றும் நிறுவனம் சேவை செய்யும் சமூகத்திற்கான அர்ப்பணிப்பினையும் மிகவும் பறைசாற்றுகின்றது.

இந்த டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரச்சாரத் திட்டமானது பாதுகாப்பற்ற நீர்நிலைகளில் நீச்சல் அல்லது குளித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதனால் ஏற்படும் ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் மற்றும் இலங்கையர்களின் குறிப்பிடத்தக்க புனிதப் பயணக் காலமான பொசன் காலத்தில் யாத்ரீகர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு ஊக்குவிப்பதையுமே நோக்கமாகக் கொண்டமைந்திருந்தது.

இந்த வகையில் அமைந்த முதலாவது பாதுகாப்பு வரைபடம், ஈடுபாடு கொண்ட சமூக ஊடக உள்ளடக்கம், பிரபலமானவர்களுடனான கூட்டாண்மை மற்றும் இதையொத்த செயல்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பன்முக அணுகுமுறையின் மூலம் இந்த பிரச்சாரத் திட்டம் பாதுகாப்பான குளியல் நடைமுறைகளை வெற்றிகரமாக ஊக்குவித்து பண்டிகைக் காலத்தின் போது நீரில் மூழ்குவதனால் ஏற்படும் மரணங்களை "பூச்சிய இறப்பு" வீதப் பதிவு என்றவாறே மாற்றியமைத்து சமூகத்திற்கான தனது பங்களிப்பினை வழங்கியிருக்கின்றது.

